27.11.2024

**HMOP. No. 60 / 2023 எ. ம.சா.2. மகாலெட்சுமி த/பெ. நாச்சியப்பன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது பிராமண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள VNCT Lotus villa முகவரியில் தற்போது நாங்கள் வசிக்க வில்லை. வேறு முகவரியில் உள்ளோம். கடந்த 6 மாதக்காலத்தில் நான்கு வீடுகள் மாற்றம் செய்து விட்டோம் என்றால் சரிதான். என் தாயார் நாங்கள் வசித்து வரும் வாடகை வீட்டின் உரிமையாளரிடம் அடிக்கடி சண்டை போட்டதால்தான் எங்களை வீட்டை காலி செய்ய சொல்லி வேறு வீட்டிற்கு அடிக்கடி மாறினோம் என்றால் சரியல்ல. வேறு வீட்டிற்கு மாறி செல்லும் போது அந்த வீட்டிற்கு முன் தொகையை என் அப்பா தான் என் தாயார் வங்கி கணக்குக்கு செலுத்துவார் என்றால் சரிதான். எனக்கும் என் சகோதரிக்கும் படிப்பு செலவு முழுவதையும் என் அப்பா செலவு செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது பிராமண வாக்குமூலத்தில் எனத தகப்பானரின் தாயார் மற்றும் சகோதரிதான் பிரச்சனைக்கு காரணம் என்று சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றும் எனத தாயார் தான் என் தகப்பனாருடன் சண்டையிட்டு வந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்னையும் என் தாயாரையும் , சகோதரியையும் வெளியில் கூட்டி போனார் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது, மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.